


# “முதலமைச்சர்களுக்கு எல்லாம் முன்னோடி கலைஞர்தான்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஐந்தாவது அமர்வில், ‘மாநிலங்களின் வளர்ச்சியும் கூட்டாட்சியின் அவசியமும்’ என்ற தலைப்பில் திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் ஜோதி சிவஞானம் அவர்கள் ஆற்றிய உரை.**

“திராவிட மாடல் என்று நாம் சொல்கிறோம். திராவிட மாடல் என்பது ஒரு வளர்ச்சி மாதிரி. இதை எப்படி வரையறுக்கிறோம் என்றால், மற்ற பின்தங்கிய மாநிலங்களுடன் ஒப்பிட்டு, இந்த மாடல் என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்ற அடிப்படையில்தான்.

‘திராவிட மாடல்’ என்பதைத் தொடங்கியவர் கலைஞர். 1967-இல் அண்ணா ஆட்சியமைத்தார் என்றாலும், அவருக்கு நீண்டகாலம் ஆட்சி நடத்தும் வாய்ப்பு அமையவில்லை. அவருக்குப் பிறகு, கலைஞர்தான் இந்தத் திராவிட மாடலின் அடித்தளத்தை உருவாக்குகிறார். கலைஞரின் திராவிட மாடலின் அடிப்படைகள் சமூகநீதியும் மாநில உரிமைகளும்.

## அரசியலமைப்பு

அரசியலமைப்புச் சட்டத்தில் மூன்று பட்டியல்கள் இருக்கின்றன. ஒன்று மாநிலப் பட்டியல். மாநில அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன, எதற்கெல்லாம் வரி விதிக்கலாம், எந்தெந்த விஷயங்களுக்கு செலவு செய்யலாம் என்று அந்தப் பட்டியல் சொல்கிறது. ஒன்றிய அரசுக்கான பட்டியல் ஒன்றிய அரசுக்கான அதிகாரங்களை வரையறுக்கிறது.

மூன்றாவது உள்ள பட்டியல் பொதுப்பட்டியல். இந்தப் பட்டியல் மாநில அரசும் ஒன்றிய அரசும் பகிர்ந்துகொள்ளும் பொதுவான விஷயங்களைப் பற்றிச் சொல்கிறது. இந்தப் பட்டியலைத் தவிர, வேறு எந்த இடத்திலும் மாநில அரசும் ஒன்றிய அரசும் பொதுவாகப் பகிர்ந்துகொள்ளும் விஷயங்கள் இல்லை.

இரண்டு அரசுகளுக்கும் தனித்தனியாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. மாநிலங்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி, தங்கள் அதிகாரங்களின் கீழ் உள்ள துறைகளில் செலவு செய்தாலே, வளர்ச்சிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினாலே அந்த மாநிலம் வளர்ச்சி அடையும். அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி அடைந்தால், நாடே வளர்ச்சி அடையும்.

## அதிகாரப்பட்டியல்

இந்தியா முழுமைக்கும் தேவையான, பொதுவான விஷயங்கள் ஒன்றிய அரசுக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றன. பாதுகாப்பு, ராணுவம், வெளியுறவுத்துறை, ரயில்வே இவையெல்லாம் ஒன்றிய அரசின்கீழ் வரும் துறைகள். ஒரு மாநில அரசின் வளர்ச்சி தொடர்பான கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, சமூக நலம், பெண்கள் நலம், விவசாயம் போன்ற துறைகள் மாநில அரசின்கீழ் வருகின்றன. சுற்றுச்சூழல் போன்ற துறைகள் பொதுப்பட்டியலில் வருகின்றன.

இந்தப் பட்டியலின்படி, அந்தந்த அரசுகள், அந்தந்த வேலைகளைச் செய்தால் நிச்சயம் வளர்ச்சி ஏற்படும். ஆனால், மாநில அரசுகள் அப்படி செயல்பட விடாமல் ஒன்றிய அரசு அதிகாரங்களைத் தன் கட்டுக்குள் வைக்க நினைக்கிறது.

## காமராசருக்கும் கட்டுப்பாடு

அரசியலமைப்புச் சட்டம் வந்த பிறகு, தமிழ்நாட்டில் முதல் 10 ஆண்டுகளில் காமராசர் முதலமைச்சராக இருந்தார். நம் திராவிட இயக்கக் கொள்கைகளான கல்வி, சுகாதாரம் எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்பதில், காமராஜருக்கும் பிடிப்பு இருந்தது. அதனால்தான் அவர் மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால், அவரால் நினைத்ததையெல்லாம் செய்ய முடியாத அளவுக்கு ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டது. முழுமையாக நிதியை ஒதுக்காமல், இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் கல்வி மற்றும் மதிய உணவுத் திட்டத்தைச் சேர்த்து குறைந்தபட்ச நிதியைத்தான் தந்தார்கள். அன்றைக்கு இருந்த வருமானத்துறை செயலாளர் ‘மதிய உணவுத் திட்டத்துக்கு எல்லாம் மாநில அரசு செலவு செய்யக் கூடாது’ என்றார்.

‘முதலீட்டுச் செலவுகளை மட்டும்தான் செய்ய முடியும்’ என்பது ஒன்றிய அரசின் நிலைப்பாடு. அரசுகள் முதலீட்டுச் செலவுகள் மட்டும் செய்து வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். வளர்ச்சியை ஊக்குவித்து, அந்தப் பலன் கிடைத்த பிறகுதான், அது பகிர்ந்தளிக்கப்படும். இந்த நடைமுறையை அரசு அதிகாரிகள் மூலமாகச் செய்தார்கள். அந்த அரசு அதிகாரிகள் ஒன்றிய அரசால் பயிற்றுவிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். இப்போதும்கூட ‘ஒரு பிரச்சினையில் மாநில அரசும் ஒன்றிய அரசும் வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுத்தால், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் ஒன்றிய அரசின் நிலைப்பாட்டைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்’ என்ற நடைமுறை வலியுறுத்தப்படுகிறது. ஆனால், உண்மையில் அந்த அதிகாரிகள், அரசியல் சட்டம் என்ன சொல்கிறதோ அதன்படிதான் செயல்பட வேண்டும்.

ஆனால், அந்தக் காலகட்டத்தில் அதிகாரிகள் ஒன்றிய அரசின் கொள்கையைத்தான் கடைப்பிடித்தார்கள். கல்வியும் உணவும் மாநிலப்பட்டியலில் இருந்தாலும் பள்ளிகளைத் திறக்கவும், மதிய உணவுத் திட்டத்துக்கும் மாநில அரசு செலவு செய்யக் கூடாது என்று அன்றைய வருவாய்த்துறை செயலாளர் சொன்னார். காமராஜர் ஊர் ஊராகச் சென்று, ‘பள்ளிகள் கட்ட, மதிய உணவுத் திட்டத்துக்கு உதவுங்கள்’ என்று வசதி படைத்தவர்களிடம் வேண்டுகோள் வைத்தார். மக்கள் பங்களிப்புடன்தான் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.



பேராசிரியர் **ஜோதி சிவஞானம்**
திட்டக்குழு உறுப்பினர்

## கலைஞர் சாதித்தார்

காமராஜர் செல்வாக்குமிக்க தேசியத்தலைவர். ஆனால், அவராலேயே தான் நினைத்த திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. இந்தச் சூழலை மாற்றி அமைத்தது கலைஞர்தான்.

‘இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, நாங்கள் சொல்வதைத்தான் செய்ய வேண்டும்’ என்று அதிகாரிகளிடம் வலியுறுத்தினார் கலைஞர். எஸ்.நாராயணன் எழுதிய *‘THE DRAVIDIAN YEARS : Politics and Welfare in Tamil Nadu’* நூல், கலைஞர் முதலமைச்சர் ஆனபின், அரசு அதிகாரிகளின் கட்டுப்பாடு எப்படி தளர்ந்தது என்பதைச் சொல்கிறது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சமூகநலத் திட்டங்களுக்கு மாநில அரசு செலவு செய்யலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டவர் கலைஞர். கலைஞர் முதலமைச்சராக இருந்த ஐந்து ஆண்டுகளில் அந்தச் செலவு 28 சதவிகிதத்தில் இருந்து 40 சதவிகிதமாக உயர்ந்தது.



அதற்கு முன்புவரை, ‘முதலீட்டுச் செலவுகள்’ என்றால் ‘தொழில் வளர்ச்சிக்கான செலவுகள்’ என்றுதான் இருந்தது. ஆனால், கலைஞரோ குடிசை மாற்று வாரியம், சாலைகள் அமைப்பது, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவது, போக்குவரத்தை அரசுடைமையாக மாற்றுவது இதுபோன்ற மக்கள் தொடர்புள்ள திட்டங்களுக்கு முதலீட்டுச் செலவுகளை செய்தார். கலைஞர் ஓர் அடித்தளத்தை அமைத்த பிறகு, அவருக்குப் பின் வந்த எல்லா அரசுகளும் அதையே செய்தன. அதற்கு முன்மாதிரியாக இருந்தவர் கலைஞர்.

## உரிமைக்குரல்

அதுமட்டுமல்ல, திட்டக்குழு ஆண்டுதோறும் நிதியைப் பிரித்து கொடுப்பதற்கு மாநில முதல்வர்களோடு சேர்ந்து நடத்தக்கூடிய ஓர் ஆய்வுக்கூட்டமான, ‘தேசிய வளர்ச்சி கவுன்சிலி’லும் உரிமைக்குரல் எழுப்பினார் கலைஞர்.

ஒன்றிய அரசு நிறைவேற்றும் திட்டங்கள், மாநில அரசுகள் நிறைவேற்றும் திட்டங்கள், ஒன்றிய அரசின் உதவியுடன் மாநில அரசுகள் நிறைவேற்றும் திட்டங்கள் என்று திட்டங்கள் மூன்று வகைப்படும்.

‘தேசிய வளர்ச்சி கவுன்சிலி’ல் பேசும்போது கலைஞர் ஒன்றிய அரசு நிறைவேற்றும் திட்டங்களை மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்துதான் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். ஏனென்றால், மாநிலங்கள் எல்லாம் ஒன்றிணைந்தால்தான் அது இந்தியா. எனவே, நாடு முழுவதும் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து மாநில அரசுகளிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்றார். மேலும், மாநில அரசுகள் நிறைவேற்றும் திட்டங்களில் ஒன்றிய அரசின் தலையீடு இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தினார்.

அந்தக் காலகட்டத்தில் எந்த மாநில முதலமைச்சரும் இப்படிப் பேசவில்லை. கலைஞர் பேசியதற்குப் பிறகுதான், பல்வேறு முதலமைச்சர்களும் அதுபோல் உரிமைக்குரலை எழுப்பினார்கள். இன்றைய திராவிட மாடல் அரசு 11 சதவிகிதத்துக்கும் மேல் உள்ள வளர்ச்சியை எட்டியிருக்கிறது, அதன்மூலம் மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றுகிறது என்றால், அதற்கு அடித்தளம் அமைத்தவர் கலைஞர்தான்.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழா குறித்து, 13.11.2025 ‘பெரியார் முழக்கம்’ வார இதழ் தலையங்கம்.**

‘அறிவுத் திருவிழாவை தமிழ்நாட்டிற்கான மாற்றுக் கொண்டாட்டமாக அறிமுகப்படுத்தி யிருக்கிறது தி.மு.க. இளைஞர் அணி. அதுவும் முற்போக்கு புத்தகக் காட்சியில் திராவிட இயக்க நூல்கள் என்ற அளவில் மட்டும் சுருக்கிவிடாமல் அம்பேத்கரிய – மார்க்சிய பதிப்பாளர்கள், விற்பனை யாளர்களையும் அழைத்து, எல்லோரையும் உள்ளடக்கிய முற்போக்கு விழாவாக நடத்தப் பட்டிருக்கிறது. உலக அரசியல் எல்லாவற்றையும் தங்கள் தொண்டர்கள் கற்றுக்கொள்ள வேண்டு மென்று சர்வதேச ஏடுகளையும் நூல்களையும் புரட்டிப் பார்த்து, அவற்றை குடிஅரசிலும், விடுதலையிலும், திராவிட நாடு ஏட்டிலும் வழங்கியவர்கள் பெரியாரும் அண்ணாவும். அத்தகைய அறிவுப் பாரம்பரியத்தை இந்த முற்போக்கு புத்தகக் காட்சியின் மூலம் தி.மு.க-வுக்கு மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார் உதயநிதி.

தேர்தல் அரசியலில் ஈடுபடுகிற எந்தவொரு கட்சிக்கும் அதிகாரத்தைப் பிடிப்பதே அவர்களின் இலக்கு. எனினும், தி.மு.க. இந்த அறிவுத் திருவிழாவை நடத்தியதன் மூலம், தாங்கள் ஒரு சராசரி அரசியல் கட்சியல்ல, அதைத் தாண்டிய சமூக சீர்திருத்த இலக்கு தங்களுக்கு இருக்கிறது என்பதை மீண்டும் ஒரு முறை தெளிவு படுத்தியிருக்கிறது.

தி.மு.க.வை நோக்கி வருகிற இளைஞர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு இளைஞர் களையும் இந்த முற்போக்கு கருத்தியலை நோக்கி ஈர்க்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. இந்தித் திணிப்பு, கல்வி உரிமை மறுப்பு என ஆரிய அடக்குமுறைகளுக்கு எதிராக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே மாணவர் படையைத் திரட்டி அரசியல்படுத்திய இயக்கம் திராவிட இயக்கம். ஆனால், இன்றைக்கு அரசியலுக்கு அர்த்தம் புரியாத ஒரு தலைமுறை நம் கண் முன்னே உருவாகியிருக்கிறது. அவர்களுக்கும் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகளைப் புரிய வைப்பது நமது கடமை. அந்தப் பணிக்கு முகவரி தரும் முயற்சியாக இந்த அறிவுத் திருவிழா நிச்சயம் அமையும். இதை இனி ஒவ்வொரு ஆண்டும் நடத்த போவதாகவும் உதயநிதி அறிவித்திருக்கிறார்.

உதயநிதிக்கும் தி.மு.க. இளைஞர் அணிக்கும் நமது பாராட்டுகள்!’